# பாடுகளை எதிர்கொள்ளுதல்

Transcribed from a message spoken on July 2016 in Chennai

By *R.S.Milton*

ஒரேவோர் எண்ணத்தை நான் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். பாடுகளை எதிர்கொள்வது எப்படி? "*மனிதனுக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்குமேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்*" (1 கொரி. 10:13).

வாக்குவாதம் பண்ணுகின்ற மனிதர்களெல்லாம் வாழ்க்கையில் சோதனைகள், பரீட்சைகள், பாடுகள், போராட்டங்கள் வரும்போது அதை எதிர்கொள்கின்ற விதம் எப்படி என்று பார்க்க வேண்டும். சோதனைகள், பரீட்சைகள், பாடுகள் இல்லாதவரை நாம் வாக்குவாதம் செய்யலாம். நம்முடைய புத்திசாலித்தனம், நம்முடைய அறிவாளித்தனம், நம்முடைய மேதாவித்தனம் ஆகிவைகளைவைத்து நாம் மற்ற மனிதர்களோடு தேவனைப்பற்றி வாக்குவாதம் செய்யலாம். ஆனால், எந்த மனிதர்களுமே உதவிசெய்ய முடியாத பாடுகளும், சோதனைகளும், பரீட்சைகளும், துன்பங்களும் வாழ்க்கையில் வரும்போது அவர்கள் வாக்குவாதம் செய்யமாட்டார்கள். அவர்களுடைய ஸ்தம்பன வித்தைகள் அவர்களுக்கு உதவிசெய்யாது. "*நீ உன் சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டு பழகிவருகிற உன் ஸ்தம்பன வித்தைகளையும், உன் திரளான சூனியங்களையும் நீ அநுசரித்து நில். ஆவைகளால் உனக்குப் பிரயோஜனம் உண்டோ, பலன் உண்டோ பார்ப்போம்*" (ஏசாயா 47:12) என்று வேதாகமம் கூறுகிறது

## பலவிதமான பாடுகள்

எல்லா மனிதர்களுக்கும் நேரிடுகிற பாடுகள், சோதனைகள் தேவனுடைய மக்களுக்கு உண்டு. ஆனால், மற்ற மக்களுக்கு இல்லாத ஒரு நம்பிக்கையும், துணிவும் தேவனுடைய மக்களுக்கு உண்டு. அது என்னவென்றால் தேவன் உண்மையுள்ளவர். நாம் தேவனுடைய அன்பு, அவருடைய வல்லமை, அவருடைய ஞானம், அவருடைய பாதுகாப்பு இவற்றின்கீழ் வாழ்கிறோம்.

பல்வேறு பகுதிகளிலே தேவனுடைய மக்களுக்கு நேரிடுகிற சோதனையைப்பற்றி வேதம் கூறுகிறது. அது நம் உடலிலே நேரிடலாம். நம் உறவுகளிலே நேரிடலாம். நம் பொருளாதாரத்திலே நேரிடலாம்.

## பாவத்தின் விளைவு

எல்லாப் பாவங்களுக்கும் விளைவு உண்டு. விளைவில்லாத பாவம் என்று ஒன்று இல்லை. விளைவு நமக்கு மட்டும் இல்லை. நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கும் நம்முடைய பாவத்தின் விளைவுகள் உண்டு. ஆகானுடைய பாவம் இஸ்ரயேல் மக்கள் எல்லாரையும் பாதித்தது

ஆண்டவராகிய இயேசு தம்முடைய இரத்தத்தினாலே நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் மன்னிக்கிறார். பாவம் இலேசான ஒரு காரியம் இல்லை. "ஆ! நான் பாவம் செய்தேன். எனக்கு ஒன்றும் நேரிடவில்லையே," என்று சொல்வது மூடத்தனம். அது ஒருவன் மின்சாரம் இல்லாதபோது 5000 வால்ட் மின்கம்பியைப் பிடித்துக்கொண்டு, "நான் 5000 வால்ட் மின்கம்பியைப் பிடித்திருக்கிறேன். ஆனால், ஒன்றும் நடக்கவில்லை. ஆகையால் நீங்களும் 5000 வால்ட் மின்கம்பியைப் பிடிக்கலாம். உங்களுக்கும் ஒன்றும் நடக்காது," என்று ஆர்ப்பரிப்பதுபோல, அக்களிப்பதுபோல இருக்கும். ஒரு கணத்தில் இல்லையென்றால் இன்னொரு கணத்தில் அந்த மின்கம்பியிலே மின்சாரம் ஓடும்.

அதைத்தான் வேதம் "*பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்* (எசே. 18:20)...*பாவத்தின் சம்பளம் மரணம்* (ரோமர் 6:23) *மோசம்போகாதிருங்கள். தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார். மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்,*" (கலா. 6:7, 8) என்று மிகவும் தீர்க்கமாகச் சொல்கிறது. வாலிபர்களாக இருந்தாலும் சரி, வயதானவர்களாக இருந்தாலும் சரி, எல்லாப் பாவங்களுக்கும் விளைவு உண்டு.

## தேவன் பாவங்களை மன்னிக்கிறார்

ஓ! ஆனால் தேவன் பாவங்களை மன்னிக்கிறாரே! நன்றாய்க் கவனிக்க வேண்டும். மனிதர்களுக்கும் தேவனுக்கும் பெரிய வேறுபாடு என்னவென்றால் நாம் பாவங்களை மன்னித்துவிட்டாலும் மறந்துபோக

மாட்டோம். தேவன் நம்முடைய பாவங்களை மன்னிப்பது மட்டுமல்ல, பாவங்களை மறக்கவும் செய் கிறார். "*அவர் திரும்ப நம்மேல் இரங்குவார். நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங் களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்*" (மீகா 7:19) என்றால் "நான் உன் பாவங் களை மன்னிப்பது மட்டும் இல்லை. உங்கள் பாவங்களை மறக்கவும் செய்கிறேன்" என்று பொருள். When God throws away the sins in the depths of the oceans, he also puts a board "No fishing here" என்று வேடிக்கையாய்ச் சொல்வார்கள். தேவன் நம்முடைய பாவங்களை சமுத்திரத்தின் ஆழங்களில் தூக்கிப் போடும்போது அங்கே "இங்கு மீன் பிடிக்க அனுமதியில்லை" என்று ஒரு விளம்பரப் பலகையையும் வைத்துவிடுகிறாராம். எனவே, நம்முடைய பழைய பாவங்களையெல்லாம் மீன்பிடித்து, மீன்பிடித்து மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத் திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுகிறார். "*மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்குவார்,*" (சங். 103:12) என்று சங்கீதக்காரர் கூறுகிறார்.

நன்றாய்க் கவனிக்க வேண்டும். வேதாகமத்திலிருந்து நாம் அறிவியல் பேசுவதில்லை. ஆனால் இது அறிவியல் சம்பந்தமானது. வடக்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரம் என்று நாம் அளந்துவிடலாம். வடதுருவத்திலிருந்து தென்துருவம் எவ்வளவு தூரம் என்று நாம் அளந்துவிடலாம். கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரம் என்று யாராவது அளவிட முடியுமா? அளவிட முடியாது. தென்துருவத்தி லிருந்து நாம் வடதுருவத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தால் வடதுருவம் வந்தவுடனே நம்முடைய நடை முடிந்துவிட்டது. ஆனால் கிழக்கிலிருந்து மேற்கை நோக்கி நடக்க ஆரம்பித்தால் என்றைக்காவது நாம் மேற்கே போய் சென்றடைவோமா? சென்றடையமாட்டோம். தேவன் நம்முடைய பாவங்களை அவ்வளவு தூரமாய் நம்மைவிட்டு அகற்றுகிறார்.

### மன்னிப்பும், சிட்சையும்

மனந்திரும்புதல் என்பது மிகவும் அருமையானது. பாவம் கொடியது. மனந்திரும்புதல் மிகவும் அருமை யானது. "எல்லாரும்தான் பாவம் செய்கிறார்கள். அதனால் இடி விழுந்து செத்தா போய்விடுகிறார்கள்?" என்பது சாத்தானுடைய தந்திரம். "பாவம் செய்வதினால் ஒரு நட்டமும் வந்துவிடாது," என்பதுதான் அவனுடைய தந்திரம். ஆனால் "பாவம் கொடியது" என்று தேவனுடைய வார்த்தை எளிமையாய்க் கூறுகிறது. அதனால், அவர் மன்னிக்கும்போது கூடவே சிட்சையை வைப்பார்.

"சர்க்கரை சாப்பிடக் கூடாது" என்று நீங்கள் கட்டளையிடுகிறீர்கள். பிள்ளை சாப்பிட்டுவிடுகிறது. அது தெரிந்தவுடன் பிள்ளை, "என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உண்மையிலேயே நான் சர்க்கரை சாப் பிட்டதற்காக மிகவும் வருத்தப்படுகிறேன்," என்றால் நீங்கள் மன்னித்துவிடுவீர்கள். எந்தத் தாயாவது மன்னித்துவிட்டு சர்க்கரை டப்பாவை பிள்ளையின் கைக்கு எட்டுகிற தூரத்தில் வைப்பீர்களா? மிகவும் அன்புள்ள தாய். பிள்ளைதான் மன்னிப்புக் கேட்டுவிட்டானே; இனிமேல் அவன் சர்க்கரை சாப்பிட மாட்டான் என்று சர்க்கரை டப்பாவை அவன் கைக்கு எட்டுகிற தூரத்தில் யாராவது வைப்பீர்களா? வைக்க மாட்டீர்கள். நீங்கள்தான் மன்னித்துவிட்டீர்களே! அப்படி வைத்தால் என்ன? மன்னிப்பு வேறு. நம்பிக்கை வேறு. மன்னித்துவிட்டு கைக்கு எட்டாத தூரத்திலே சர்க்கரை டப்பாவை வைக்க வேண்டும். இதற்குப் பெயர்தான் சிட்சை.

"சார், எங்கள்மேலே நம்பிக்கை இருந்தால் நீங்கள் வினாத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியே போய் விடுங்கள். நாங்கள் பார்த்து எழுதவே மாட்டோம்," என்று மாணவர்கள் சொன்னால் அப்படிச் செய்ய லாமா? வினாத்தாளைக் கொடுத்துவிட்டு வெளியே போனால் மாணவர்கள் பார்த்துத்தான் எழுது வார்கள். அது மனிதனுடைய சுபாவம்.

தேவன் மன்னிப்பார். ஆனால் சிட்சிப்பார். எப்படி சிட்சிப்பார் என்பது மனிதனுக்கு மனிதன் வேறுபடு கிறது. ஏனென்றால், நம்முடைய உள்ளிந்திரியங்களை அறிந்தவர் தேவன். என்னுடைய உள்ளமைப்பு எப்படிப்பட்டது என்பதை அறிந்தவர் தேவன்.

சில பாவங்களுக்கு நாம் ஈடுகட்ட வேண்டும். ஒருவனைக் கொள்ளையடித்து, வீடு வேறே கட்டியா யிற்று என்று வைத்துக்கொள்வோம். கொள்ளையடித்துவிட்டு, "ஆண்டவரே என்னை மன்னியும்," என்று சொன்னால் ஆண்டவர், "உன்னுடைய பாவங்களையெல்லாம் நான் மன்னித்துவிட்டேன்; அவைகளை சமுத்திரத்தின் ஆழத்தில் நான் போட்டுவிட்டேன்; கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ் வளவு தூரமாக உன்னுடைய பாவங்களை அகற்றிவிட்டேன்; உன் பாவங்களை என் முதுகுக்குப்பின் பாக எறிந்துவிட்டேன்; இவைகளை நினையாமலும் இருப்பேன். ஆனால், உன் வீட்டை விற்று யாருக்கு

அந்தப் பணத்தைக் கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுத்துவிடு," என்று சொல்வார். பாவங்களை மன்னித்துவிட்டார், முதுகுக்குப் பின்பாக எறிந்துவிட்டார், நினையாமலுமிருப்பார், சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிட்டார், கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் எறிந்துவிட்டார் என்றால் பாவத்தினால் உண்டான நன்மைகளை நாம் வைத்துக்கொள்ளலாம் என்பதல்ல அதன் பொருள்.

சில சோதனைகள் மனிதனுடைய மதியீனத்தினால் வருகின்றன. "*மனிதனுடைய மதியீனம் அவன் வழியைத் தாறுமாறாக்கும். என்றாலும் அவன் மனம் கர்த்தருக்கு விரோதமாய்த் தாங்கலடையும்*" (நீதி. 19:3). ஆனால், எல்லாச் சோதனைகளும் மனிதனுடைய மதியீனத்தினால் வருவதில்லை.

**உள்ளான கட்டமைப்பை மாற்றுதல்**

நம்முடைய உள்ளான மனிதனை, உள்ளமைப்பை, கட்டமைப்பை ஆண்டவராகிய இயேசுவின் சாயலுக்கு ஒத்த சாயலாக மறுஉருவாக்குவதற்காக தேவன் நம்முடைய வாழ்க்கையில் பல சோதனைகளை, பரீட்சைகளை, பாடுகளை ஏற்பாடு செய்கிறார். நம்முடைய உள்ளமைப்பை அறிவது மிகவும் கடினம். உள்ளமைப்பை அறிவதற்கு எந்த scannerரும் இந்த உலகத்தில் இல்லை. சங்கீதம் 139:23, 24இல் சங்கீதக்காரன் "You scan my heart" என்று சொல்கிறான். "*தேவனே, என்னை ஆராய்ந்து என்னுடைய இருதயத்தை அறிந்துகொள்ளும். என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்.*" தேவன் ஒருவர் தவிர என்னுடைய இருதயத்தை, என் உள்ளிந்திரியங்களையும், நினைவுகளையும், சிந்தனைகளையும் அறிந்தவர் வேறொருவரும் இல்லை. அவைகளை நம்முடைய மனைவி மக்கள்கூட அறிய முடியாது. உடன்பிறந்தவர்கள் அறிய முடியாது. பெற்றோர்கள்கூட அறிய முடியாது. இயேசுகிறிஸ்துவுக்கு ஒவ்வாத காரியங்கள் அங்கு இருக்கின்றன. புரிந்துகொள்வதற்கு இது உங்களுக்குக் கொஞ்சம் கடினமாக இருக்கும். ஆனால், இது கடினமானதல்ல. "எந்தப் புறம்பான சட்டத்தின்படியும் நான் எந்தத் தவறும் செய்யவில்லை," என்று நாம் நினைக்கலாம். ஆனாலும், என்னுடைய உள்ளமைப்பிலே தேவனுக்கு விரோதமான, தேவனுக்கு எதிரான, தேவனுக்குப் புறம்பான, தேவனுக்கு முரணான ஒன்று இருக்கிறது.

"நீ எப்படியிருந்தாலும் பரவாயில்லை. வெள்ளிக்கிழமை கோவிலுக்குப் போய் ஒரு மெழுகுதிரி கொழுத்தி, ஒரு ஊதுபத்திக் கொழுத்தி அல்லது தேங்காய், பழம், கற்பூரம் வைத்து வந்தால், கடவுள் மிகவும் சந்தோஷப்பட்டு, நீ கேட்கிற எல்லாவற்றையும் கொடுத்துவிடுவார்," என்றுதான் இந்த உலகத்திலே மதங்கள் போதிக்கும்.

இந்த மாதிரியெல்லாம் கடவுளை ஏமாற்ற முடியாது என்று சில சித்தர்கள் அதை எதிர்த்துப் பேசினார்கள்.

"நட்ட கல்லைத் தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே
சுற்றிவந்து முணுமுணுவென்று சொல்லும் மந்திரம் ஏதடா
நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவைதான் அறியுமோ".

ஒரு கல்லை நட்டிவைத்து, சுற்றி பூக்களையெல்லாம் போடுவதினால் கடவுள் மகிழ்ச்சியடைந்துவிடப் போவது கிடையாது. கொள்ளைக்காரன், கொலைகாரன், விபச்சாரி, வேசித்தனம் பண்ணுகிறவன் எல்லாரும் அதைச் செய்யலாம். நானும் அதைச் செய்வேன்.

அதனால்தான் சங்கீதக்காரன், "தேவனே, என்னை ஆராய்ந்து என்னுடைய இருதயத்தை அறிந்துகொள்ளும்," என்று பாடுகிறான். என்னுடைய இருதயம் உமக்குமுன்பாக எப்படிப்பட்டது? "*பலியை நீர் விரும்புகிறதில்லை. விரும்பினால் செலுத்துவேன். தகனபலியும் உமக்குப் பிரியமானதல்ல. தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங்குண்டதும் நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்*" (சங். 51:16, 17). கடவுளுக்கு ஒரு பலி செலுத்த வேண்டுமென்றால் ஒன்றேவொன்றைத்தான் செலுத்த முடியும். அது நொறுங்குண்ட இருதயம். "ஆண்டவரே, என்னுடைய பாவங்களைக்குறித்து நான் வருந்துகிறேன்". இதைவிடச் சிறந்த பலியை எந்த மனிதனும் கடவுளுக்குக் கொடுக்க முடியாது. ஆடு, மாடு, புறா, கோழிகளையெல்லாம் பலி கொடுக்க வேண்டாமா? தான் பலிகளை விரும்பவில்லை என்று அவர் சொல்லுகிறாரே.

ஆகவே, பாவங்களினால் வருகிற துன்பங்களை நான் சொல்லவில்லை. மரத்தின் உச்சியில் உட்கார்ந்து கொண்டு, மரத்திற்குகீழே உள்ள கிளையை வெட்டினால் கண்டிப்பாக கீழே விழுந்து கை கால் உடையும். இயேசுகிறிஸ்து இதைச் சொல்லவேண்டியதில்லை. திருவள்ளுவரே சொல்லிவிடுவார்.

நுனிக்கொம்பர் ஏறினார் அ·.திறந்தூக்கின்
உயிர்க்கிறுதி யாகிவிடும்.

ஒருவன் மிக உற்சாக மிகுதியினால் மரத்திலே ஏறி, "நான் எவ்வளவு பெரிய ஆள் தெரியுமா? எனக்கு இதுவரை எதுவும் நடக்கவில்லை. நான் மாட்டவில்லை. சிக்கவில்லை," என்ற எண்ணத்தில் இன்னும் கொஞ்சம் வேகமாக மேலே ஏறினால் அது அவன் உயிர்க்கு இறுதியாகிவிடும்.

தேவனுடைய பொறுமையையும், இரக்கத்தையும் நீ அளவுகடந்து சோதிக்காதே. தேவன் மிகவும் பொறுமையுள்ளவர், நீடிய சாந்தமுள்ளவர். மனிதன் பாவம் பண்ணும்போதெல்லாம் தேவன் மின்னலையும், இடியையும் அனுப்பி அவனைச் சாகடித்தார் என்று வைத்துக்கொள்வோமே. இந்த உலகத்திலே யாராவது பாவம் பண்ணுவானா? பாவம் பண்ணமாட்டான். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறைந்தவர்களெல்லாம் இடி மின்னல் தாக்கி உடனே செத்துப்போகவில்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபிறகுகூட யாரையும் அச்சுறுத்தவில்லை. ஏரோது, பிலாத்து, ரோமப் போர்ச்சேவகர்கள் எல்லாரிடமும் போய், "நீங்கள் யாரை சிலுவையில் அறைந்தீர்கள்?" என்று பயமுறுத்தவில்லை. உடனே எல்லாரும் நடுநடுங்கி, "ஐயா! மன்னித்துக்கொள்ளுங்கள். நீங்கள் இவ்வளவு பலசாலி என்றோ, உயிர்த்தெழுந்து வந்துவிடுவீர்கள் என்றோ எங்களுக்குத் தெரிந்திருந்தால் உங்களை கொலைசெய்திருக்க மாட்டோம்," என்று அவர்கள் சொல்லவில்லை.

மனிதர்கள் கையில் கொஞ்சம் வல்லமையைக் கொடுத்துப் பாருங்கள், கொஞ்சம் பணத்தைக் கொடுத்துப்பாருங்கள். இந்த மாதம் செலவுக்குப் போக கொஞ்சம் சேமிக்கிற மாதிரி பணத்தைக் கொடுத்துப் பாருங்களேன் அல்லது ஒரு வீடு கட்டிவிட்டால்! அவர்கள் ஆடுகிற ஆட்டம் இருக்கிறதே!

மனிதர்களுடைய உள்ளமைப்பை மாற்றுவதற்காக தேவன் அப்படிப்பட்ட காரியங்களை வைக்கிறார். நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபிறகும் நம்முடைய உள்ளமைப்பு அவ்வளவு எளிதாக மாறுவது இல்லை. யாரும் நம்மைத் தொடவிடமாட்டோம். நம்முடைய வாழ்க்கைத் துணையோ, நம்முடைய பிள்ளைகளோ, சகோதர சகோதரிகளோ நம்மைத் தொடவிட மாட்டோம். நமக்கு சுருக்கென்று இருக்கும். தொடுகிற ஆளுக்கும் shock அடிக்கும். உடனே நாம் "இந்தக் காரியத்திலே இவரைத் தொடக்கூடாது. இவரோடு தொட்டும் தொடாமலும் பட்டும் படாமலும் உறவாடிக் கொள்வோம்," என்ற முடிவுக்கு வந்துவிடுவோம்.

### பாடுகளை எதிர்கொள்வது எப்படி

இரண்டாவது குறிப்பைச் சொல்கிறேன். இந்தப் பாடுகளை எதிர்கொள்வது எப்படி? "*கர்த்தருடைய இரட்சிப்புக்குப் நம்பிக்கையோடே காத்திருக்கிறது நல்லது*" (புலம்பல் 3:26). அந்த அதிகாரம் முழுவதையுமே நீங்கள் வாசித்துப்பாருங்கள். "*நான் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே. அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள். உமது உண்மை பெரிதாயிருக்கிறது*" (புல. 3:22, 23). அவர் நம்முடைய பாடுகளிலும், நம்முடைய சோதனைகளிலும், நம்முடைய நெருக்கங்களிலும், நம்மை மூழ்கிப்போக விடமாட்டார். பேய் வந்து "நீ செத்துப்போவாய்," என்று நம்முடைய காதுகளிலே ஓதுவான். "*சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்து போவார்கள். வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் களைப்படையார்கள். நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்,*" (ஏசாயா. 40:29-31).

தேவனுடைய இரட்சிப்புக்கு நாம் பொறுமையோடே காத்திருக்க வேண்டும். "*உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்கும்...Suffering produces Character. Character produces endurance. Endurance produces hope*" (ரோமர் 5:3). இந்த வரிசையைப் புரிந்துகொள்வது கொஞ்சம் கடினம். மனிதனிடத்தில் ஒரு திடமான குணத்தை உருவாக்குவதற்கு, தேவன் பல்வேறு விதமான பாடுகள்மூலமாக அவனை நடத்த வேண்டியிருக்கிறது.

கோடைகாலத்திலே, வறட்சியான நாட்களிலே, ஏதோவொரு மரத்தினுடைய வேர்கள் தண்ணீர் இருக்கிற இடத்தைநோக்கிப் பல கிலோமீட்டர் தூரத்திற்குப் போகுமாம். திருநெல்வேலி மாவட்டத்தில்

ஊழியம்செய்த ராபர்ட் கால்டுவெல் என்பவர் பனைமரத்தின் வேர் எவ்வளவு தூரம் போகிறது என்று ஒரு ஆராய்ச்சி செய்தார். உண்மையான ஆராய்ச்சி. தண்ணீர் இல்லாத நாட்களிலே அல்லது ஒரு குறிப்பிட்ட சூழலிலே நாம் எப்படிப் பிழைப்போம் அல்லது வாழ்வோம் அல்லது தப்பிப்போம் என்பதற்கு அவருடைய பதில் "அவரிடத்தில் மிகுந்த கிருபைகள் உண்டு." ஆண்டவரே, நீர் என்னிடத்தில் என்ன செய்ய விரும்புகிறீரோ, அதைச் செய்யலாம். உம்மேல் உள்ள நம்பிக்கை ஒருநாளும் குறைந்துபோவதில்லை.

"*அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்,*" (யோபு 13:15) என்று யோபு சொல்கிறார். அவர் கொன்று போடுவதில்லை. யோபு பேசினதையெல்லாம் கேட்டு "யோபு தவறாகப் பேசுகிறார்," என்று சொல்லக்கூடாது. ஏனென்றால், ஒருவன் பாடுகளை அனுபவிக்கும்போது, பாடுகள்வழியாக, துன்பங்கள்வழியாக, சோதனைகள் பரீட்சைகள் வழியாக ஒரு மனிதன் நடந்து போகும்போது அவன் பேசின எல்லா வார்த்தைகளையும் கணக்கில் வைத்துக் கொண்டு, நன்றாக ஆனபிறகு, "நீ அப்படிச் சொன்னாய்; ஞாபகம் இருக்கிறதா? அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று என்னைப் பார்த்து என்ன சொன்னாய்? என்ன சொன்னாய்? இதுதான் என்மேலே வைத்திருக்கிற நம்பிக்கையா?" என்றெல்லாம் தேவன் கேள்விகள் கேட்பதில்லை. அவன் தேவன்மேல் வைத்துள்ள தன் அன்பையும், தன் நம்பிக்கையையும் தன் பற்றுதலையும் எவ்வளவு அறிவித்தாலும் சரி, தேவன் அதிலே மிகவும் மகிழ்ச்சியடைகிறார்.

**பாடுகளின் நோக்கம் மறுசாயல் என்ற ஒரேவொரு நன்மை**

அருமையான சகோதர சகோதரிகளே, பாடுகள் என்பது randomஆக, arbitraryஆக நேரிடுவதுபோலத் தோன்றலாம். ஆனால் "*அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்*" (ரோமர் 8:29-30).

நன்மை என்று ஒருமையில் சொல்லப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன். தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு எல்லாம் *நன்மையாக நடக்கிறது* என்று சொல்லவில்லை ஆனால் *நன்மைக்கு ஏதுவாக* இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தம்முடைய அநந்த ஞானத்திலே தீமைபோல் தோன்றுகின்ற ஒன்றையும் அல்லது தீமையாகக் கருதப்படுகிற ஒன்றையும் நன்மைக்கேதுவாக மாற்றுகிறார்.

நோய் ஒரு நன்மையல்ல. நோய் என்பது கண்டிப்பாக தீமைதான். நான் ரொம்ப சூப்பர் பரிசுத்தவான் போல, "ஆண்டவரே எனக்கு நோயைத் தந்ததற்காக உமக்கு நன்றி," என்று ஜெபம் பண்ண வேண்டாம். "ஆண்டவரே, இதை என்னால் தாங்க முடியவில்லை. இதை நீக்கும்," என்றுதான் நாம் ஜெபிக்க வேண்டும். தேவனிடத்தில் போய் நடிக்க வேண்டிய அவசியமில்லை. என்னுடைய இருதயம் துன்புறுகிறது என்றால், "ஆண்டவரே, என்னுடைய இருதயம் மிகவும் துன்புறுகிறது. தாங்க முடியவில்லை. எப்போது விடியும் என்று விடியக்காரருக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப்பார்க்கிலும் எங்கள் கண்கள் அதிகமாய் உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறது. எப்போது எங்களை விடிவுக்குக் கொண்டுவருவீர்? எப்போது எங்களை இரட்சிப்பீர்? எப்பொழுது எங்களை விடுவிப்பீர்?" என்றே ஜெபிக்கலாம்.

நாம் நம்முடைய இருதயத்தின் கதறுதலையும், ஏக்கங்களையும் ஆண்டவரிடத்தில் நேர்மையாகச் சொல்ல வேண்டும். பிதாவினுடைய அன்பு, அவருடைய அக்கறை, அவருடைய வல்லமை அவருடைய ஞானம் ஆகியவைகளின்மேல் நம்முடைய நம்பிக்கை தளராமல், விசுவாசம் தளராமல், சொல்ல வேண்டும். "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" என்று சொன்னவவருடைய இறையாண்மை, ஆளுகை, அரசாங்கம் ஆகியவைகளைமீறி நம்முடைய வாழ்க்கையிலே ஒன்றும் நடைபெற்றுவிடுவது இல்லை.

ஆகவே, தேவனுடைய மக்களுடைய வாழ்க்கையிலே நடைபெறுகின்ற எல்லாம் நன்மை அல்ல. தீமைகள், துன்பங்கள், இழப்புகள், நட்டங்கள், காயங்கள், புண்கள் ஏற்படுகின்றன. ஆனால் அவருடைய அநந்த ஞானத்தினாலே அவைகளையும்கூட அவர் நன்மைக்கேதுவாக மாற்றிவிடுகிறார்.

இப்போதெல்லாம் polythene bags சாலைகள் போடுவதற்குப் பயன்படுத்துகிறார்கள். அது மனிதர் களுடைய ஞானம். உபயோகமில்லாத ஒன்றை ஒரு உபயோகமான ஒன்றிற்காக அவர்கள் பயன் படுத்துகிறார்கள்.

தேவன் மனிதர்களைவிடப் பல கோடிமடங்கு ஞானமுள்ளவர். தீமையாகத் தோன்றுவதைக்கூட மக்க ளுடைய நன்மைக்கேதுவாகப் பயன்படுத்துகிறார். ஒரேவொரு நன்மைதான் உண்டு. இறுதியாக, கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்துப் பார்த்தால் நிற்பது ஒரேவொரு நன்மைதான் நித்தியத்திற்கும் இருக்கும். **எந்த அளவுக்கு இந்த மனிதனுக்குள், இந்த மனுஷிக்குள், கிறிஸ்து உருவாக்கப்பட் டிருக்கிறார் என்பதுதான் அந்த ஒரேவொரு நன்மை**.

"துன்பங்களினூடாய் நான் போனேன், வந்தேன்," என்பது காரியமில்லை. சில பேர் துன்பங்களி னூடாய்ப் போவார்கள். துன்பங்களைவிட்டு வெளியே வந்தபிறகு கொஞ்சம்கூட மாறாமல் முன்பிருந் ததுபோலவே இருப்பார்கள். அந்தத் துன்பத்தினாலே எந்தப் பயனும் இல்லை.

எசேக்கியாவுக்குத் துன்பம் நேரிட்டது. அவன் ஜெபித்தான். ஆண்டவர் அவனுடைய வாழ்க்கையில் பதினைந்து ஆண்டுகள் நீட்டித்துக் கொடுத்தார். துன்பத்தைவிட்டு வெளியே வந்தபிறகு "நான் எவ் வளவு பெரிய ஆள் தெரியுமா?" என்று மார்தட்டிக்கொண்டான். நேபுகாத்நேச்சாருடைய ஆட்கள் வந்த போது அவன் தன் அரண்மனையிலிருந்த எல்லாவற்றையும் திறந்துகாட்டினான். அது எப்படியென்றால், "எங்கள் வங்கிக் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது, எங்கள் நன்செய் நிலம் எத்தனை ஏக்கர், புன்செய் நிலம் எத்தனை ஏக்கர், எங்கள் படிப்பு எவ்வளவு உயர்ந்தது,. எங்கள் பிள்ளைகள் எங்கே படிக்கிறார்கள், என்ன வேலை செய்கிறார்கள், எவ்வளவு சம்பாதிக்கிறார்கள், எந்த நாட்டில் வசதியாக வாழ்கிறார்கள், எங்கள் வீடு எவ்வளவு பெரியது என்று இதைப் பாருங்கள், அதைப் பாருங்கள்," என்று சொல்வதுபோன்றதாகும்.

நம்மிடத்தில் காட்டுவதற்கு ஒன்றேயொன்றுதான் இருக்கிறது. "நான் எவ்வளவு இழிவான மனிதன்" என்பதுதான் காட்டுவதற்கு நம்மிடத்தில் இருக்கிறது. பெருமை பாராட்டுவதற்கு நம்மிடத்தில் ஒன்றும் இல்லை. தேவன் தம்முடைய இரக்கத்தினாலே சில உலக நன்மைகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். அதை நிறுத்துக் காட்டுவதற்கு நம்மிடத்தில் ஒன்றும் இல்லை.

ஆகவே துன்பங்கள், பாடுகள், துயரங்கள் அல்ல காரியம். துன்பங்களினூடாய்க் கடந்துபோய் வெளியே வரும்போது எந்த அளவுக்குக் கிறிஸ்து அடிப்புவேலையாய் நமக்குள் உருவாக்கப்பட்டிருக் கிறார் என்பதுதான் காரியம். ஏதோ ஒரு விதத்திலே தேவன் நம்மைத் தொட்டிருக்கிறார். "இந்த மனிதனுக்குள்ளிருந்து ஒரு நறுமணம் வருகிறது," என்பது அதன் விளைவாக இருக்க வேண்டும். "கிறிஸ்துவை அறிகிற அறிவின் ஒரு நறுமணம் வருகிறது. இவருடைய சொற்களிலே, நடை உடை பாவனைகளிலே, போக்குவரத்திலே, அவருடைய இருப்பிலே, அவருடைய நிற்பிலே கிறிஸ்துவுக்குரிய ஒன்று கூட்டிச்சேர்க்கப்பட்டிருப்பது," விளைவாக இருக்க வேண்டும்.

பாடுகளின் நாட்களிலே நாம் தேவனைப்பற்றிச் சார்ந்துகொண்டிருக்க வேண்டும். "ஆண்டவரே, இந்தப் பாடுள்ள நாட்களிலே உம் கிருபையினால் என்னைத் தாங்கும்," என்பது நம் ஜெபமாக இருக்க வேண் டும். சங்கீதத்தில் ஒரு நல்ல வசனம் உண்டு. அதை நான் மிகவும் அனுபவித்து மகிழ்வேன். "*என் கால் சறுக்குகிறது என்று நான் சொல்லும்போது, கர்த்தாவே உம் கிருபை என்னைத் தாங்குகிறது,*" (சங். 94:18). சறுக்கி விழுந்து விட்டேன் என்று சொல்வதற்கும், விழுந்து விடுவதற்கும் நடுவிலே அவருடைய கிருபை நம்மைத் தாங்குகிறது. அது உண்மை. நாம் அழிந்துவிடுவதில்லை. "ஆண்டவரே! உம்மைப் பற்றிக்கொள்வதற்குரிய கிருபை எனக்குத் தாரும்," என்று நாம் ஜெபிக்க வேண்டும்.

தேவன் நம்மில் அவர் விரும்புகிற அந்த மாற்றத்தைச் செய்து முடித்தவுடன் நம்முடைய சோதனை களை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவார். யோபுவின் புத்தகம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. "ஆண்டவரே, உம்முடைய ஞானத்தையும், திறமையையும், வல்லமையையும் நான் நம்பியிருக்கிறேன். உம்முடைய காரியம் என்னில் நிறைவேறியவுடன் நீர் அதை முடிவுக்குக் கொண்டுவருவீர் என்று தெரியும், நீர் எல்லாவற்றையும் அளந்தே செய்கிறீர்," என்று நாம் தேவனிடத்தில் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

தேவன் தருகின்ற சூழ்நிலைகளை, பொறுப்புகளை நாம் பணிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த பொறுப்புகளைத் தள்ளிவிடுவோமென்றால் அதற்கேற்றாற்போல் ஆவிக்குரிய கல்வி, சிட்சை, இருக் கும். ஆனால், நாம் கண்ணைத் திறந்து பார்க்கமாட்டோம். சில சமயங்களில் பிலேயாமைப்போல கழுதையைக் காலால் உதைப்போம். "ஆண்டவரே, என் கண்களைத் திறந்தருளும்," என்று நாம் ஜெபிக்கும்போது, அப்படிப்பட்ட ஒரு நிலையை எட்டும்போது, தேவன் நம்முடைய பாடுகளை ஒரு

முடிவுக்குக் கொண்டுவருகிறார். அப்போது யோபு சொன்னதுபோல "*தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்...என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மை காண்கிறது*" (யோவு 42: 2, 5) என்றும் சொல்வோம். அதன்பின், "*ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் உட்கார்ந்து மனஸ்தாபப்படுகிறேன்*".

அருமையான தேவனுடைய மக்களே! பாடுகளில் இப்படிப்பட்ட ஒரு மனப்பாங்கை நாம் காத்துக் கொள்வோமாக. நம்மைக்குறித்த தேவனுடைய திட்டம் நன்மைக்கேதுவானதுதானேதவிர ஒருநாளும் தீமைக்கேதுவானது அல்ல. "*நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே*" (எரே. 29:11). ஆமென்.